**NST Campus**

# மூன்றாம் தவணைப் பரீட்சை - 2026

| தரம் 06 | சைவநெறி | 1.30 மணித்தியாலம் |
|---|---|---|

**சுட்டிலக்கம் : ......................** **புள்ளிகள்**

## பகுதி - 1

- **எல்லா வினாக்களுக்கும் விடை அளிக்க.**

**01.சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. சைவசமயத்தவர்களின் முழுமுதற் கடவுள்.

   1. சிவபெருமான் 2. விநாயகர் 3. நந்தி 4. முருகன்

2. “ அரிது அரிது மானிடராதல்அரிது” எனக் கூறியவர்.

   1. பாரதியார் 2. விபுலானந்தர் 3. ஔவையார் 4. திலகவதியார்

3. பஞ்சபுராணம் ஓதமுன்பும் ஓதிய பின்பும் சொல்ல வேண்டியது.

   1. நமசிவாய 2. சிவசிவ 3. திருச்சிற்றம்பலம் 4. இறைவா

4. “கண்ணைக் கொத்திக் காக்கைப் பிள்ளையார” என அழைக்கப்படும் ஆலயம்.

   1. கதிர்காமம் 2. களுதாவளைபிள்ளையார் 2. புறாளை விநாயகர் 4. முன்னேச்சரம்

5. சைவத் திருமுறைகளைத் தொகுத்தவர்.

   1. இராஜராஜசோழன் 2. நம்பியாண்டார்நம்பி 3. மாறனார் 4. ஞானப்பிரகாசர்

6. “கர்ணவேதனம்” என்று அழைக்கப்படும் வாழ்வியற் சடங்கு.

   1. ஏடுதொடக்கல் 2. பெயர்சூட்டல் 3. காதுகுத்தல் 4. சோறூட்டல்

7. வேதியராக வந்த இறைவனை அறியாது “பித்தன” என்று ஏசிய நாயனார்.

   1. திருஞான சம்பந்தர் 2. திருநாவுக்கரசர் 3. சுந்தரர் 4. மாணிக்கவாசகர்

8. திருஞானசம்பந்தரின் குருபூசை தினம்.

   1. வைகாசி மூலம் 2. சித்திரைச்சதயம் 3. ஆனிமகம் 4. ஆடிச்சுவாதி

9. திருகோணமலை பத்திரகாளியம்மன ஆலய மகோற்சவம் நடைபெறும் நாட்கள் எத்தனை.

1. ஒன்பது 2. எட்டு 3. ஐந்து 4. பத்து

10. தலையில் மருத்து நீர் வைத்து நீராடிக் கொண்டாடும் பண்டிகை.

    1. தைப்பொங்கல் 2. சித்திரைப்புத்தாண்டு 3. தீபாவளி 4. ஆடிப்பிறப்பு

( 10 ஒ 2 ஸ்ரீ 20 )

02. தொடர்புபடுத்துக.

| | |
|---|---|
| 1. பிரணவப் பொருளாய் விளங்குபவர் | 1. வைரவர் |
| 2. கிராமியத் தெய்வம் | 2. ஞானப்பிரகாசர் |
| 3. திருக்கோணேச்சரத்தின் தீர்த்தம் | 3. பிள்ளையார் |
| 4. பசுவதைக்கு அஞ்சியவர் | 4. மாறநாயனார் |
| 5. சிவனடியாருக்கு அமுதுபடைத்தல் | 5. பாவநாசம் |

( 5x2 = 10 )

03. சரியாயின் ( ) எனவும் பிழையாயின் ( ) எனவும் அடைப்புக் குறியினுள் அடையாளமிடுக.

1. இலங்கையில் சீதையம்மன் ஆலயம் மட்டக்களப்பில் உள்ளது. ( )
2. திலகவதியார் திருநாவுக்கரசரின் தமக்கை ஆவார் ( )
3. பதிஇபசுஇபாசம் என்பன முப்பொருளாகும் ( )
4. ஆலயம் செல்வதால் மனம் அமைதி ஏற்படாது ( )
5. மஞ்சள் கொண்டு விநாயகர் திருவுருவம் பிடிக்கலாம். ( )

( 5x2=10 )

04. பொருத்தமான சொற்களைக் கொண்டு இடைவெளியினைப் பூர்த்தி செய்க.

( மதிப்பு ∴ உண்மை∴ ஆலயம் ∴மாவிட்டபுரம்∴ காவல்தெய்வம் )

1. குதிரை முகம் நீங்கியதால் ……………………….என்ற பெயர் ஏற்பட்டது.
2. நாட்டார் தெய்வங்கள் …………………… எனவும் அழைக்கப்படும்
3. வீட்டில் உள்ள பெரியவர்களுக்கு …………………….. அளிக்க வேண்டும்.
4. ஆன்மா லயப்படும் இடம் …………………… ஆகும்.
5. சமய விழுமியப்பண்புகளில் ………………… பேசுதலும் ஒன்றாகும்.

( 5x2=10 )

## பகுதி - 11

முதலாம் வினா உட்பட எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக

01.பின்வரும் திருமுறைப் பாடல்களில் ஒன்றினை அடிமுறை பிழையாது எழுதுக.

அதனைப் பாடியவர்இபண் என்பவற்றையும் குறிப்பிடுக.

1. “ பித்தாப்பிறைசூடி” ………… 2. “பூசுவதும் வெண்ணீறு” …………

3.’’உலகெலாம் உணர்ந்து’’…………..   4. “ இடரினும் தளரினும்’’ …………

( 10 புள்ளி )

02. “ திருமுறைகள் தெய்வத் தன்மை பொருந்தி அருட்பாக்கள்’’

1. திருமுறைகளைத் தொகுத்தவர் யார்? தொகுப்பித்தவர் யார்?
2. தேவார முதலிகள் யாவர்?
3. திருநாவுக்கரசர் செய்த அற்புதங்கள் நான்கு தருக?

( 3+3+4=10)

03. “ விரதங்கள் இறையுணர்வை ஏற்படுத்துகின்றன’’

1. விரதம் என்றால் என்ன?
2. சிவனுக்குரிய விரதங்கள் மூன்று தருக?
3. விரத காலங்களில் செய்யத்தகா செயல்கள் வை?

( 3+3+4=10)

04. ‘‘மெய்கண்ட சாஸ்திரங்கள் பதினான்கு ஆகும்’’

1. முப்பொருள்களும் எவை?
2. பதியின் மூவகைத் திருமேனிகளும் யாவை?
3. பசுவின் வேறு பெயர்கள் எவை? பசு என்பதன் பொருள் யாது?

( 3+3+4=10)

05. “ கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்’’

1. ஆலயம் என்பதன் பொருள் யாது?
2. மாவிட்டபுரம் எனப் பெயர் வரக் காரணம் என்ன?
3. கிராமிய தெய்வங்களை வேறு எவ்வாறு அழைப்பர்? கிராமியத் தெயவங்கள் மூன்று தருக?

06. சைவ சமயத்தவர்களின் வாழ்வுடன் சடங்குகள் நெருங்கிய தொடர்புடையவை’’

1. வாழ்வியல் சடங்கு என்றால் என்ன?
2. வாழ்வியல் சடங்குகள் மூன்று தருக?
3. பெரியோர் முன்னால் தவிர்க்க வேண்டிய செயல்கள் நான்கு தருக?

( 3+3+4=10)

07. பின்வரும் தலைப்புகளில் இரண்டினைத் தெரிவு செய்து சிறுகுறிப்பு எழுதுக.

1. ஞானப்பிரகாசர்
2. சைவஇல்லம்
3. ஆலயவழிபாடு
4. திருஞானசம்பந்தர்
5. திருக்கோணேச்சரம் ( 5+5=10)